6. அறிவிப்புகள்.

(அ) ஓர் உறுப்பினரின் உரையில் சில பகுதிகளை நீக்குவது குறித்த பேரவைத் தலைவரின் அறிவிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 16—3—1978 அன்று இப்பேர்வையில் காவல் துறை மற்றும் தீயணைப்புப் பணிகள் குறித்த மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. நாஞ்சில் வின்சென்ட் அவர்கள் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் வின்சென்ட் மீது ஒரு குற்றச்சாட்டை கூறினார். அப்போது குறுக்கிட்டுப் பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் "இதுபற்றி முதல் அமைச்சர் அவர்கள் பேசும்போது விளக்கினால் எனக்கு உதவியாக இருக்கும்" என்று குறிப்பிட்டார்.

அப்போது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் "கோப்புகளைப் பார்த்ததுபோல மாதிரி என்று அந்தக் கருத்தினைச் சொல்லி இருக்கிறார்கள். போல, மாதிரி என்பதெல்லாம் போலி என்பதன் மறு பெயர் என்றுகூடச் சொல்லலாம். நான் அப்படி எடுத்துக் கொள்கிறேன். இருந்தாலும், மாண்புமிகு நாஞ்சில் வின்சென்ட் அவர்களுக்கு இன்னமும் நேரம் இருக்கிறது. அவர்கள் சொல்லியதற்கு ஆதாரம் இல்லை என்றால் வருத்தத்தோடு திரும்பப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டார்கள்.

"ஆதாரம் இருக்குமானால் அந்த ஆதாரத்தை வைத்துக் கொண்டு பேச வேண்டுமே தவிர இருக்கிறது, இருக்கிறது என்று சொல்லாமல் அந்த ஆதாரத்தை உடனடியாகக் காட்டினால் நான் தீர்ப்புச் சொல்ல முடியும். ஆகவே, அந்த உறுப்பினரவர்கள் அந்தப் பிரச்சினையில் எனக்கு ஆதாரம் காட்ட வேண்டுமென்றும் இப்போது இந்தப் பிரச்சினையை விட்டுவிட்டு வேறு பிரச்சினையைப் பேச வேண்டுமென்றும் கேட்டும் கொள்கிறேன்" என்று பேரவைத் தலைவர் குறிப்பிட்டபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "நீங்கள் தீர்ப்புக் கூறும் வரையில் இந்தச் செய்தி பதிவேட்டில் ஏற வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்" என்று கூறியதற்கிணங்க, "நாஞ்சில் வின்சென்ட் அவர்களை அந்தப் பிரச்சினை பற்றிய பேச்சிற்கான ஆதாரங்களை நான் நன்றாகப் பரிசீலனை செய்து தீர்ப்பு சொல்லும் வரையிலும் அதனை வெளியிட வேண்டாமென்று தீர்ப்பு அளிக்கிறேன்" என்று பேரவைத் தலைவர் குறிப்பிட்டார்.

இது பற்றி, மாண்புமிகு திரு. நாஞ்சில் வின்சென்ட் அவர்களிடம் விளக்கம் கேட்டதற்கு, குற்றச்சாட்டை சொல்லி, இது உண்மையா, பொய்யா என்பதற்கு முதல்வர் கண்டுபிடிக்க

வேண்டும் என்று, தான் சொல்வதற்கு முன்னால் குறுக்கீடுகள்வந்து விட்டன என்று விளக்கம் அளித்துள்ளார். எனவே அவர் பேசிய தற்கு தகுந்த ஆதாரம் இல்லை என்பதுதான் தெளிவாகிறது.

இம்மாதிரி குற்றச்சாட்டை ஒருவர் மீது ஒருவர் சொல்லி விட்டு, அவ்வாறு இருக்கின்றதா, பேசப்படுகின்றதா என்று சொல்லி அதிலிருந்து விலகிக் கொள்வதில், அவையினது கண் ணியம் காக்கப்படுவது இல்லை என்று நான் கருதுகிறேன். மேலும் இம்மாதிரி குற்றச்சாட்டுக்களைக் கூறும்போது அது எந்த உறுப்பி னரைப் பற்றியதாகவோ, அல்லது அமைச்சரைப் பற்றியதாகவோ இருக்கிறதோ அதற்கான ஆதாரங்களைக் காட்டி பிறகு பேரவைத் தலைவர் அனுமதித்தால், சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு அல்லது அமைச்சருக்கு முன்அறிவிப்புக் கொடுத்து விட்டு அவையில் எழுப்புவதுதான் பாராளுமன்ற முறை. ஆனால், இவ்வவையில் இம்மாதிரி முறைகள் கடைப்பிடிக்கப்படுவதில்லை. ஆயினும், இம்மாதிரிக் குற்றச்சாட்டுக்கள் கூறுவதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில், இம்முறைகளைப் பின்பற்றுவதுதான் பாராளு மன்ற நடைமுறைகளுக்குச் சிறந்தது. இம் மரபைப் பற்றி பாராளுமன்ற விதிகளில் சிறப்பாக ஒரு விதி சேர்க்கப்பட்டுள்ளது. அது பின்வருமாறு :—

"No allegation of a defamatory or incriminatory nature shall be made by a member against any person unless the member has given previous intimation to the Speaker and also to the Minister concerned so that the Minister may be able to make an investigation into the matter for the purpose of a reply :

Provided that the Speaker may at any time prohibit any member from making any such allegation if he is of opinion thae such allegation is derogatory to the dignity of the House ol that no public interest is served by making such allegation. (Rule 353 of Lok Sabha Rules)

நம் விதிகளில் இம்மாதிரி ஒரு விதி சேர்க்கப்படும் வரையில்' இடு மன்றத்தில் பாராளுமன்ற மரபாக இது கையாளப்பட வேண்டும் மென்று நான் தீர்ப்புக் கூறுகிறேன்.

எனவே, இனிமேல் எந்த உறுப்பினரும் வேறொரு உறுப்பினர் பற்றியோ அல்லது அமைச்சரைப் பற்றியோ அல்லது அமைச் சரின் பொறுப்பின் கீழ் பணியாற்றுகின்றவர்களைப் பற்றியோ குற்றம் சாட்டுவதாக இருந்தால், அவற்றைக் கூறுவதற்கு மூன் பேரவைத் தலைவருக்குக் காட்டி அவரது முன் அனுமதி பெற்றுத் தான் கூறவேண்டும். அனுமதி பெறாது, பொறுப்பேற்காது பேர வையில் பேச அனுமதிக்கப்பட மாட்டாது,

மாண்புமிகு உறுப்பினர் திரு. நாஞ்சில் வின்சென்ட் அவர்கள் தகுந்த ஆதாரங்கள் எனக்குக் காட்டவில்லையாதலால், அவர் கூறிய குற்றச்சாட்டுகள் பற்றிய குறிப்புகள் எல்லாம் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

(முற்பகல் 10-10)

(7) அவையில் அமைச்சர் மீதோ அதிகாரிகள் மீதோ, உறுப்பினர்கள் மீதோ ஆதாரம் காட்டிய பின்னரே குற்றச்சாட்டு செய்ய வேண்டுமென்கின்ற பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

*திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, கொண்டுவரப்பட்ட உரிமைப் பிரச்சனையை ஒட்டி தாங்கள் தெரிவித்திருக்கிற கருத்துக்களை பெருமளவுக்கு ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், இடையிலே தாங்கள், எதிர்காலத்திலே சட்டமன்றம் எந்த விதிமுறையின்கீழ் இயங்க வேண்டும் என்பதை விளக்கும் வகையில் உறுப்பினர் ஒருவர் பேசுகின்றபோது குறிப்பிடுகின்ற குற்றச்சாட்டு அமைச்சரைப்பற்றியோ அதிகாரி பற்றியோ அல்லது நிர்வாகம் பற்றியோ நிர்வாகத்தில் இருக்கின்ற சீர்கேடு பற்றியோ குறிப்பிட வேண்டுமென்றாலும் முன்னதாக ஆதாரம் காட்டிவிட்டுத்தான் கூறவேண்டுமென்று கூறுவதானால் அதற்குச் சட்டமன்றம் தேவையில்லை.

நிர்வாகத்தில், அமைச்சர்கள், அதிகாரிகள், செயலாளர்கள் பற்றி வருகின்ற புகார்களைக் கூட ஆதாரம்காட்டிப் பேசவேண்டுமென்றால் அதில் அர்த்தம் இருக்காது. நிர்வாகம் என்பது வேறு, தனிப்பட்டவர் என்பது வேறு. நிர்வாகத்தில் இலட்சம் ரூபாய்க்கு கான்ட்ராக்ட் விட்டதில் தவறு நடந்திருக்கிறது என்று சொல்லும் போது அதற்கு ஆதாரம் காட்டிவிட்டுத்தான் பேச வேண்டும் என்று சொல்வது எந்த விதத்திலும் சரியல்ல. நிர்வாகம், தனிப்பட்டவர் என்பதைப் பிரித்துப் பார்க்க வேண்டும் ; இரண்டும் ஒன்றல்ல. நிர்வாகத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது ஆதாரம் காட்டித்தான் பேசவேண்டுமென்பது உறுப்பினர்களின் உரிமையைப் பறிப்பது ஆகும். எதிர்க் கட்சிக்காரர்களுக்கு இருக்கின்ற முதல் உரிமையே அதுதான். ஆகவே, அந்த வகையில் தங்களுடைய தீர்ப்பை மாற்றியமைக்க வேண்டும் ; அதுபற்றித் தெளிவாகப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, எங்களுடைய கட்சியின் சார்பிலும் மாண்புமிகு திரு அன்பழகன் அவர்கள் கூறிய கருத்துக்களை வரவேற்கிறேன். நாம் இதுபற்றி ரூல்ஸ் கமிட்டியிலே கலந்து பேசி, அதற்குப் பிறகு முடிவு செய்வதுதான் சரியானது. நிர்வாகத்தில் இருக்கக் கூடியவர்கள் பற்றி புகார்